# அரசாங்க அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

## 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையில் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் 31 நாட்களுக்கான காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2019.05.21 ஆந் திகதிய 2124/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தரவில் பெரிய வெங்காயத்திற்காக வெளியிடப்பட்ட உத்தரவு 2019 அக்டோபர் மாதம் 03. ஆம் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மங்கள சமரவீர
நிதி அமைச்சர்

நிதி அமைச்சு
கொழும்பு 01,
2019 அக்டோபர் 02 ஆம் திகதி.

### அட்டவணை

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 01 | 07.03 | 0703.10.20 | பெரிய வெங்காயம் | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 1.00 |